## இயல் மூன்று

# சென்னையில் உள்ள தேவாரத்திருமுறை வைப்புத்தலங்கள்

இயல் - மூன்று

# சென்னையில் உள்ள தேவாரத்திருமுறை வைப்புத்தலங்கள்

ஒரு குறிப்பிட்ட தலத்தைப் பற்றிப் பாடும்போது திருப்பதிகத்துள், வேறு ஒரு தலத்தைப் பற்றிய தகவலும் சொல்லப்படுவது உண்டு. அத்தகைய தலத்திற்கு "வைப்புத்தலம்" என்றழைக்கப்படுதல் மரபாகும்.

சைவசமய குரவர்களாகிய நால்வர் பெருமக்கள் இலிங்கத் திருமேனியில் உறையும் ஆதியப்பனை தமிழ்ப் பாக்களால் பாடப் பெற்றத் திருத்தலங்கள் "பாடல் பெற்றதிருத் தலங்கள்" ஆகும்.

இவர்களின் திருப்பதிகம் முழுமை பெறாமல் அல்லது முழுமையும் கிடைக்கப் பெறாமல், திருப்பதிகங்களுள் பெயர்கள் மட்டும் குறிக்கப்படும் திருத்தலங்கள் "வைப்புத்தலங்கள்" ஆகும். சென்னை வட்டத்திலுள்ள வைப்புத்தலங்கள் அவற்றின் அமைப்புகள், இறைவன், இறைவி ஆகியோரின் பெருமைகள், வழிபடும் முறைகள் போன்றவற்றை இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.

## தொண்டை நாட்டு வைப்புத்தலங்கள்

1. அருள்மிகு கச்சிமயானேசுவரர் திருக்கோயில் – காஞ்சிபுரம்
2. அகத்தீசுவரர் திருக்கோயில் – பொய்கை நல்லூர்
3. மார்க்கபந்தீசுவரர் திருக்கோயில் – விரிஞ்சிபுரம்
4. திருக்காமேசுவரர் திருக்கோயில் – பொன்னூர்
5. திருமூலட்டானேசுவரர் திருக்கோயில் – தெள்ளாறு
6. திந்திரிணீசுவரர் திருக்கோயில் – திண்டிவனம்

7. நந்தீசுவர சுவாமி திருக்கோயில் – நந்தீசுவரம்

8. அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் – எழும்பூர்

9. திருவேட்டிநாதர் திருக்கோயில் – திருவல்லிக்கேணி

10. வியாக்ரபுரீசுவரர் திருக்கோயில் – திருப்புலிவனம்

11. பீமேசுவரர் திருக்கோயில் – புரிசை

12. அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயில் – வளைகுளம்

13. வாலீசுவரர் திருக்கோயில் – திருக்காரிக்கரை

இதில் சென்னையில் உள்ள வைப்புத் தலங்களாக உள்ளவை, நந்தீஸ்வரர், அர்த்தநாரீசுவரர், திருவேட்டிநாதர் கோயில்கள் ஆகும்.

## கோயிலும் தல புராணமும்

தலபுராணங்கள் என்னும் தலவரலாறு பற்றிப் பேசும் புராணங்களும் சைவ சமயத்தில் கோயில் வழிபாட்டை ஊக்குவிக்கத் தோன்றின சைவக்கோயில்கள் பற்றிய புராணங்களே இன்று மிகுதியாகக் கிடைக்கின்றன.

பக்திப் பாடல்களைக் காப்பிய வடிவில் எழுத முயன்ற புலவர்கள் தலபுராணமாக அவற்றைத் தந்தனர். பக்திப் பாடல்களின் வளர்ச்சி நிலையே தலபுராணத்தோற்றத்திற்குக் காரணமாகிறது.

## தலபுராணத்தின் அமைப்பு

தலப்புராணத்தில் சருக்கம் என்னும் பெயரில் பல பகுதிகள் உள்ளன. இவை பல கதைகளைத் தன்னுள் கொண்டு இருக்கும். ‘‘தல புராணத்தை நோக்க ஒரு பெரிய கதை இல்லை, தலத்தின் பெருமையையும், தீர்த்தத்தின் பெருமையினையும், மூர்த்தியின் பெருமையினையும் கூறும் சிறு சிறு துண்டு

கதைகளாக அமைந்திருக்கும். இச்சிறுகதைக் கோவையே தலபுராணமாகும். தலபுராணத்தின் தலைவன் இறைவனாக இருப்பான்''.[1]

## தல புராணத்தின் நோக்கமும் பயனும்

தலபுராணத்தின் நோக்கமும் பயனும் மக்களை நல்வழியில் செயல்பட வைத்து இறைவனை அடையும் படிச் செய்வதே ஆகும்.

சமயத்தின் கோட்பாடுகளை மக்களுக்கு எளிதில் விளங்கச் செய்யுமாறு தலபுராணங்கள் கதைகளின் வழியில் சென்று இறைக் கொள்கைகளை உணர்த்துகின்றன.

வாழ்க்கையில் பிறருக்குத் துன்பம் செய்தால் அல்லது தீய வழியில் சென்றால் ஏற்படும் துயரத்தைத் தலபுராணங்கள் கூறி அவற்றிலிருந்து நீங்கி இருக்குமாறு வழிவகை செய்கின்றன.

சமய வழிபாட்டு முறையில் பாதுகாப்பிற்கும் தலபுராணங்கள் உதவுகின்றன. மக்களுக்குப் பண்டைக்கால வரலாறு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, ஊர், அமைப்பு, கலை ஆகியவற்றை அறியத்துணை செய்வது தலபுராணம். மேலும் பல இறை வடிவங்களின் கதைகளைக் கூறி மக்களிடம் பக்தியை மிகுதிப்படுத்துகின்ற பணிகளையும் தல புராணங்கள் செய்கின்றன.

## வைப்புத் தலங்கள்

வைப்புத்தலங்கள் என்றால் என்ன, அத்தலங்களைத் தரிசிப்பதனால் என்ன முக்கியத்துவம் கிடைக்கும் என்பதனை அறிதல் அவசியம். திருமறையில் பாடல் பெற்ற தலங்களைத் தனிப் பாடல்கள் மூலம் சைவ சமயக்குரவர் நால்வரும் பாடியுள்ளனர். அவ்வாறு பாடும்போது அருகில் உள்ள தலங்களையும் அவர்கள் தரிசித்த நிலையில்தான் தன்

தலயாத்திரையினைத் தொடர்ந்தனர் என்பதனைச் சேக்கிழார் பெரியபுராணம் நமக்குச் சான்று காட்டுகிறது.

சைவசமய அடியார் தலயாத்திரைகளை மேற்கொள்ளும்போது தாங்கள் செல்லும் வழியில் அமைந்துள்ள தலங்கள் பற்றியும் பாடியும் தரிசனம் செய்தும் சென்றனர். அந்த அடிப்படையில் பல தலங்களுக்குத் தனிப்பாடல்கள் கிடைக்கப்பெறாமல் போனாலும் தொன்மையும் பழமையும் வாய்ந்த இத்தலங்களை பிறதலங்களோடு வைத்துப்பாடியமையால் இவை வைப்புத்தலங்கள் என்ற பெயரைப் பெற்றன. ஒரே பாடலிலும் பல தலங்களை வைத்துப் பாடியுள்ளனர்.

இரண்டாம் திருமுறையில் இடம் பெற்ற திருஞானசம்பந்தரின் சேத்திரக்கோவை, ஆறாம் திருமறையில் திருநாவுக்கரசரின் சேவடித் திருக்கோவைத் திருத்தாண்டகம் மற்றும் அடைவுத்திருத்தாண்டகம், சுந்தரரின் ஏழாம் தேவாரத்திருமுறையில் இடம்பெற்றுள்ள ஊர்த்தொகை மற்றும் திருநாட்டுத் தொகை, எட்டாம் திருமறையில் இடம் பெற்ற மாணிக்க வாசகரின் கீர்த்தித்திருவகவல் ஆகியவை இந்த வைப்புத்தலங்கள் பற்றிப் பாடப்பட்டவையாகும்.

வைப்புத்தலங்களையும் ஏன் தரிசிக்க வேண்டுமென்றால் சைவத்தின் அடிப்படை சாராம்சம் அடியாரைப் போற்றுதலாகும். நால்வரும் தலயாத்திரை மேற்கொண்டபோது நாயன்மார்கள் அவதரித்த ஊர்களையும் தரிசித்துவிட்டுத் தான் அவற்றை வைப்புத் தலங்களாகப் பாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நந்திவரம்**

தொண்டை மண்டலத்தில் உள்ள புகழ் பெற்ற சைவத்திருத்தலங்களில் ‘‘நந்திவர்ம பூந்தீசுவரர்’’ என்ற திருத்தலமும்

ஒன்றாகும். இத்திருத்தலத்தில் உள்ள இறைவனாகிய நந்தீஸ்வரரைப் பற்றி அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் இராமேதவரத்திற்கு இணையாக வைத்துத் தேவாரத்தில்,

*நாடகமாடிட நந்திகேச்சுரம் மாகாளேச்சுரம்*
*நாகேச்சுரம் நாகளேச்சுரம் நன்கான*
*கோடீச்சுரம் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்*
*குக்குடேச்சுரம் அகத்தீச்சுரம்* [2]

என்று அடைவுத் திருத்தாண்டகத்தில் 318 ஆம் பாடலில் பாடியுள்ளார். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மூன்றாம் நந்திவர்மன் இப்பகுதியினை ஆண்டமையால் இவ்விடம் “நந்திபுரம்” என வழங்கப்பட்டது. மேலும் தரும தேவதையாகிய நந்தி இத்தலத்தில் வழிபட்டமையால் “நந்திக்கேச்சுரம்” என்ற திருப்பெயர் உருவாயிற்று.[3]

## திருத்தல அமைவிடம்

சென்னையிலிருந்து செங்கை செல்லும் வழியில் 36வது கி.மீ. தொலைவில் “திருநந்திகேசுவரம்” என்னும் திருத்தலம் அமைந்துள்ளது. இவ்விடம் முன்னொரு காலத்தில் “நந்திபுரம்” என்னும் திருப்பெயரால் அழைக்கப்பட்டது. தற்பொழுது இப்பெயர் மருவி “நந்திவரம்” என வழங்கப்பட்டு வருகிறது. கூடுவாஞ்சேரி இரயில் நிலையத்திற்குக் கிழக்கில் இத்தலம் அமைந்துள்ளது.[4]

## தலச்சிறப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புப் பெற்று விளக்கும் இத்திருத்தலத்தில் இறைவன் சுயம்பு இலிங்கமாக எழுந்தருளியுள்ளார். இங்குள்ள நந்தி தீர்த்தம் மிகவும் சிறப்புப் பெற்றது. தரும தேவதையான நந்தி இத்தலத்து இறைவனை வழிபட்டமையாலும் சித்தர்கள் வழிபட்டு

வருவதாலும் இவ்வூர் இறைவனுக்கு "நந்தீசுவரர்" என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.[5]

## வரலாற்றுத் தகவலும் திருக்கோயில் காலமும்

தமிழகத்தில் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் செங்கல், சுண்ணாம்பு கொண்டு கோயில்கள் கட்டப்பட்டன. அவ்வாறு கட்டப்பட்ட கோயில்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றால் சிறப்புப் பெற்றவையாகக் காணப்பட்டதால் அதனைக் குறித்து ஆதரித்த காலத்தில் தோன்றிய சமயச் சான்றோர்கள் இத்திருத்தலங்களைப் பாடல் பாடிச் சிறப்பித்துள்ளனர்.

அவ்வாறு சிறப்பித்த கோயில்கள் இன்று திருத்தலங்களாகவும், திவ்விய தேசங்களாகவும், வைப்புத் தலங்களாகவும் அமைகின்றன. அவ்வாறு திகழ்ந்த திருக்கோயிலுக்கு அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த அரசர்கள் நிலையான வடிவத்தைக் கொடுத்தனர். அவ்வாறு நிலைப்பு வடிவம் பெறப்பட்ட கோயில்களில் நந்திவரம் எனும் நந்தீசுவரம் கோயிலும் ஒன்றாகும்.

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்விரண்டு கல்வெட்டுகளும் சமசுகிருத கிரந்த வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் கி.பி.8, 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துகள் எனக் கல்வெட்டு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கல்வெட்டின் வழியாக இத்திருக்கோயிலின் காலத்தையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் அப்பர் இக்கோயிலைப் பற்றித் தேவாரத்தில் பாடிய விவரத்தையும் அறிய முடிகிறது.[6]

திருக்கோயில் காலத்தையும் அதனை ஆதரித்த சமயச் சான்றோர்களின் பின்புலத்தை அறியும் சான்றாக விளங்குவது

கல்வெட்டுகளே ஆகும். கல்வெட்டுகள் கற்பனைக்கும் கட்டுக் கதைகளுக்கும் இடம் கொடுப்பதில்லை. அவற்றில் உண்மைக்கு மட்டுமே இடமுண்டு. அந்த வகையில் இக்கோயிலின் காலத்தை அறியும் கீழ்க்கண்ட கல்வெட்டுச் செய்தி பதிவாகியுள்ளது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சியடைய விரும்பியே இத்திருக்கோயில் கட்டப்பட்டதாகப் பையனூரில் அமைந்துள்ள எட்டீஸ்வரர் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இத்திருக்கோயிலின் கல்வெட்டையும் அதன் ஆண்டையும் ஆராயும் பொருட்டு, அப்பர் இத்திருக்கோயிலைப் பாடியதற்கான சான்றை அறிய முடிகிறது.

## கல்வெட்டுச் செய்திகள்

காலம் : கி.பி.768

மன்னர் : மூன்றாம் நந்திவர்மன்

செய்தி : கணேசன் கோயிலில் உள்ள ஒரு திடலின் மேல் கீழ்க்கண்ட செய்தி பதிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியாவது, சேக்கிழான் குட்டேரா என்ற நிலக்கிழார் நந்திபுரத்தில் உள்ள ஒரு கோயிலுக்கு ஒரு அணையா விளக்கை அன்பளிப்பாக கொடுத்ததை இக்கல்வெட்டுப் பதிவு செய்கிறது. சேக்கிழான் என்பது வேளாளர் சமுதாயத்தில் உள்ள ஒரு துணைச் சமுதாயத்தைக் குறிக்கும். மேற்கண்ட கல்வெட்டின் வாயிலாக அப்பர் ஏறக்குறைய 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் (அ) பிற்பகுதியில் வாழ்ந்திருப்பார் என்றும் இக்காலத்தில் இக்கோயிலைப் பற்றி தேவாரத்தில் அடைவுத் திருத்தாண்டகத்தில், “நந்தீஸ்வரம் நந்தீஸ்வரரை பாடியிருக்கிறார் என்றும் புலனாகிறது.

மகேந்திரவர்மனின் வழித் தோன்றலான மூன்றாம் நந்திவர்மனின் காலமும், அப்பருடைய காலமும் ஏறக்குறைய சமகாலமென்று அருதியிட்டுக் கூற வாய்ப்புள்ளது. மேலும் திருக்கோயிலின் தூண்களின் வடிவத்தை ஆராயும் பொழுது இக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது என்று உறுதிபடக் கூற முடிகிறது.[7]

## தலம் தோன்றிய வரலாறு

நந்திவரம் என்னும் சிற்றூர் பல நூற்றாண்டுகளுக்கு முன் புல்வெளிகளும் குன்றுகளும் நிறைந்து வனப்புடன் திகழும் பசுக்களின் மேய்விடமாக விளங்கியது. அங்குப் புல்லும் புதரும் நிறைந்த ஓரிடத்தில் புற்று ஒன்று இருந்ததாகவும் அவ்விடத்தில் காராம்பசு ஒன்று அப்புற்றில் தினமும் பாலினைச் சொரிந்து வந்ததாகவும் சில நாட்கள் சென்ற பின்பு இதைக் கண்ணுற்ற பசுவின் உரிமையாளர் அப்புற்றினை வெட்ட, அச்சமயத்தில் அதிர்ச்சியுறுமாறு "அசரீரி ஒன்று தோன்றி இந்த இடத்தில் இறைவன் உறைவதாக உணர்த்தி கோயில் அமைத்து வழிபடுமாறு கூற" அப்பொழுதிருந்த அரசனால் இத்திருக்கோயில் எழுப்பப்பட்டு மிகச் சிறப்பாக பூசைகள் நடைபெற்று வருகின்றன[8] என்று கோயில் குருக்கள் குறிப்பிட்டார்.

## திருத்தலத்து இறைவி

இத்திருத்தலத்தில் உறையும் இறைவியின் திருப்பெயர் "சௌந்தர்ய நாயகி" என்பதாகும். அழகுத் தமிழில் "அழகொளிர் நாயகி" என்றும் "அழகுடைநாயகி" என்னும் வழங்கப்பெறுகிறாள்.

*அன்னையின் திருமுக சௌந்தர்யம் அழகுக்கு*
*ஒருவரும் ஒவ்வாத வள்ளி*

என்று இறைவியின் அழகைப் பாடல் வர்ணித்ததை அபிராமிப்பட்டரின் பாடல்வழி அறியலாம்.[9]

**பரிவார மூர்த்திகள்**

கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ள இறைவன் சன்னதியின் வாயிற்படிக்கு வலது புறமாக வலம்புரி விநாயகர் வீற்றிருக்கிறார். சன்னதியின் இடது புறமாக ஆறுமுகத்துடன் சண்முகன் வீற்றிருக்கிறார்.

திருக்கோயிலின் திருச்சுற்றில் பிறைக்கோட்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி திருக்கோயிலின் பின்புறம் மேற்கு நோக்கி மகாவிஷ்ணுவும், மகாவிஷ்ணுவின் இடதுபுறம் கிழக்கு நோக்கி கணபதி, மகாவிஷ்ணுவின் வலதுபுறம் கிழக்கு நோக்கி வருவோரின் குறை தீர்க்கும் வள்ளி தேவ சேனையுடன் வீற்றிருக்க சுப்பிரமணிய சுவாமியும், உள்ளனர்.

திருநந்திகேசுவரர் திருச்சுற்றில் வடக்கு நோக்கி, பிரம்மாவும், கோமுக வாயிலில் தீர்த்தம் வருமிடத்தில் தெற்கு நோக்கி ‘‘உண்பனவும் உடுப்பனவும் சண்டீசனமாம் பதம் தந்தோம்’’ என்ற கூற்றுக்கிணங்க சண்டீசுவரரும், அதனை அடுத்து சங்கு சக்கரத்துடன் வடக்கு நோக்கி விஷ்ணு துர்க்கையுடன். துர்க்கையின் ஈசான பாதத்தில் தெற்கு நோக்கிச் சிவகாமசுந்தரியுடன் நடராசப்பெருமான் மாணிக்கவாசகரின் ‘‘நாடகமாடிய நந்திகேச்சுரம்’’ எனும் பாடலுக்கிணங்கப் பஞ்சலோக சிலை வடிவத்தில் காட்சி தருகிறார்.

திருக்கோயிலின் திருச்சுற்றில் உட்பிரகாரத்தில் ஈசான மூலையில் தெற்கு நோக்கிக் கால பைரவர் காட்சி தருகிறார். நந்தீசுவரருக்கு எதிரில் இடதுபுறமாகச் சிவனை நோக்கிய வீரபத்திரரும், வலது புறமாக அக்கினி மூலையில் மேற்கு நோக்கிச் சிவசூரியரும், சிவனுக்கு நேரெதிரில் பாலநந்தி மற்றும் பலிபீடமும் அமைந்துள்ளன.[10]

## திருக்கோயிலின் வெளித்தோற்றம்

திருக்கோயிலின் தெற்கு நோக்கி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. திருச்சுற்றின் இடதுபுறமாக நந்தவனமும் அதன் பின்புறம் தென்னை மரங்களும், பூத்துக் குலுங்கும் பூந்தோட்டத்துடன் காட்சியளிக்கிறது.

திருக்கோயிலின் மேற்கு மூலையில் தலமரமான வில்வம் மிகச் செழுமையாகக் காட்சி தருகிறது. வெளிப்பிரகார ஈசான மூலையில் நவக்கிரகங்களும் மூலவருக்கு நேரெதிரில் மகாநந்தியும், பலிபீடமும், அக்கினி மூலையில் அபிடேக தீர்த்தமுள்ள திருக்கிணறும் அதனைத் தொடர்ந்து ஈசான மூலையில் சுவாமியின் திருமடைப்பள்ளியும் அமைந்துள்ளன.[11]

## பெருமைகள்

சைவசமயக் குரவர்களுள் ஒருவரான அப்பர் பாடிய திருத்தலங்களில் நந்திவரம் நந்திசுவரர் திருக்கோயிலும் ஒன்று. இத்திருத்தலம் தொண்டை மண்டலத்தில் உள்ள புகழ் பெற்ற வைப்புத்தலங்களில் சைவத்திருத் தலங்களில் ஒன்றாகும். அப்பர் பாடிய பாடலின் வழி நந்திவர்மனின் புகழையும், கல்வெட்டுச் செய்திகள் மூலம் திருத்தலத்தின் பழம் பெருமைகளையும் அறிய முடிகிறது.[12]

# திருவல்லிக்கேணி

**தென்னன் தொண்டையர் கோன்செய்த நன்மயிலைத்**
**திருவல்லிக்கேணி நின்றானை**[13]

என்ற திருமங்கையாழ்வார் பாசுரப்பகுதியில் இத்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லவர்களுக்கு முன்பே மயிலாப்பூர் படைவீடாகத் (தலைநகர்) திகழ்ந்தது. துறைமுகமாகவும் திருமயிலைத் திகழ்ந்தது. திருவல்லிக்கேணியையே

மயிலையில் அடக்கித்தான் அடையாளம் காட்டினார்கள். மாடமாளிகைகளும் கடலில் மரக்கலங்களுமாய் இருந்ததாம் மயிலை.

பிரம்மாண்ட புராணத்தில் திருவல்லிக்கேணியைப் பத்து அத்தியாயங்களில் பேசக் காணலாம். அதிலும் மயிலாப்பூர் வருணனையே முதலாகக் காணப் பெறுகிறது.

*ஊருண் கேணி உண்துறை தொக்க*
*பாசியற்றே பசலை* [14]

என்ற பாடலைப் பார்க்கும் போது இப்போதைய கிணறு மாதிரி இருப்பதே கேணி என்று ஆகாது. ஊரார் வந்து நீர் முகந்து செல்லத்துறையும் உடையதாய்த் தானே ஊறும் இயல்புடையதாயிருப்பதே கேணி என்பதாகும். அஃது ஒரு பெரிய குளமாகவுமில்லாமல், சிறிய கிணறாகவும் இல்லாமல் நடுத்தரமானதும் உயரமற்ற கரையுடையதும் கொண்டதே கேணியாகும். அல்லிக் கொடி படர்ந்ததால் அல்லிக்கேணி அல்லியங்கோதை என்றும் தாயாரை அழைப்பதுண்டு. எனவே தாயாராகிய திருவல்லி அருளால் நீர் சுரக்கும் கேணி என்றும் ஆகி விட்டது.

108 திவ்விய தேசங்களுள் ஒன்றாய் இவ்வல்லிக்கேணி எண்ணப் பெறுகிறது. இது பல வகையில் தனித் தன்மையுடையதாகும். இக்கேணியை மையமாகக் கொண்டு துளசி வனமாகவே இப்பகுதி முன்பு இருந்தது. வடமொழியில் இக்கேணியை கைரவணி (அல்லி) புஷ்கரணி (குளம்) என்றும், துளசிவனத்தைப் பிருந்தாரண்யமென்றும் கூறுவர். பிருந்தாவனம் என்றாலும் துளசிக் காடேயாகும். இந்தக் கேணிதான் இன்று தெப்பக்குளமும் நீராழி மண்டபமுமாகக் காட்சி தருகிறது.

இக்குளத்தில் மீன்கள் வளர்ப்பதில்லை. அழுக்கின்மையால் மீனில்லாது இயற்கையாக உள்ளது.

இக்குளத்தில் தூய்மை கெட்டும் கூட மீன் வளர்வதே இல்லை. ஒரு முனிவர் தவத்தை இக்கேணி மீன்கள் கலைத்ததால் சாபத்தின் காரணமாக மீன்கள் வளர்வதில்லை என்றும் கூறுகின்றனர். இக்குளத்தில் மீன்கள் ஏன் வளர்வதில்லை என்பதை அறிவியலார் தான் ஆராய வேண்டும்.[15]

திருப்பதி சென்று வழிபட்டோர் திரும்பும் பதி இப்பதியே. மணவாள மாமுனிகளால் தென்னாசாரியர்க்கு வைதானச ஆகம முறையில் வழிபாடுடையது இக்கோயில். இத்திருத்தலத்தில் மிகப் பழமையான கோயில் மண்டபம் உண்டு. மிகப் புதியவையும் உண்டு. அயோத்தி இராமன், திருவரங்கத் தெம்மான், கச்சி வரதன், திருப்பதி வேங்கடேசன், மதுராபுரிக் கண்ணன், அகோபிலத்து நரசிங்கன் ஆகிய அனைவரும் இணைந்த சந்நிதியில் அருள் வழங்கும் திவ்விய தேசம் இத்திருத்தலமாகும். பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் நேரில் வந்து மங்களாசாசனம் செய்த தலமாகும். இக்கேணியையே கங்கையைவிடப் புனிதமாகும் என்பர்.

17 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் சாந்தோமிலிருந்த பிரஞ்சுக்காரருடன் போர் செய்த போது இக்கோயில் முன் பகுதியைப் பயன்படுத்தினர். 1843 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் இக்கோயில் வந்தது. இது பொதுமக்கள் சொத்து என்று எழுதி வைத்துள்ளனர்.[16]

## கோயில் அமைப்பு

பெரிய விசாலமான இடத்துடன் கூடிய கோயில். இராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவை உள்ளன. கோயிலின் வடக்கில் பெரிய திருக்குளம் உள்ளது.

மேற்கில் நந்தவனம் அமைந்துள்ளது. இக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முந்தையது ஆகும்.

### மூலவர்

மூலவர் பெயர் "திருவெட்டீசுவரர்" சுயம்பு. சிறிய திருமேனியுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகின்றார்.

### தல வரலாறு

ஆர்க்காட்டு நவாப் காட்டை அழித்து ஊர் உண்டாக்கும் போது, பணியாள் ஒருவன் சுயம்பு லிங்கப்பெருமான் உச்சியின் மேல் வெட்டி விட்டான். அவ்வெட்டு இன்றும் மூலவர் மேல் காணப்படுகிறது. அதனால் பெருமான் வெட்டீசுவரன் எனப் பெயர் பெற்று நாளடைவில் மறுவி திருவேட்டீசுவரன் என்றாயிற்று.[17]

பாசுபதாஸ்திரம் பெற வேண்டி காட்டில் லிங்கத்தை பிரதிட்டை செய்து கடும் தவமியற்றினான் அர்ச்சுனன். மூசாசுரன் ஒரு பன்றி வடிவில் அர்ச்சுனன் வழிபட்ட லிங்கத்தை அசுத்தம் செய்தான். அர்ச்சுனன் சினம் கொண்டு வில்லெடுத்து நாண் ஏற்றினான். அர்ச்சுனன் பாணத்தால் பன்றி வீழ்ந்து சாய்ந்தது. அர்ச்சுனன் பன்றியை நெருங்கினான். அதற்குள் எதிர்ப்புறத்திலிருந்து வந்த வேடன் தான் செலுத்திய பாணத்தினால் தான் பன்றி சாய்ந்தது என்று சொந்தம் கொண்டாடினான்.

வாக்குவாதம் முற்றி கையிலிருந்து வில்லால் வேடன் தலையிலடித்தான். அர்ச்சுனன் வேடன் நின்ற இடத்தில் சிவபெருமான் இருந்தார். தன் தவறுணர்ந்து காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான் விஜயன். அர்ச்சுனன் வில்லால் அடித்த காயம் தழும்பாக

லிங்கத்திருமேனியில் காணப்படுகிறது. வெட்டுப்பட்டவர் வெட்டீசுவரர் ஆனார்.[18] இதனை சென்னைக் கோயில்கள் என்ற நூலும் குறிப்பிடுகிறது.

## புராணம்

வேட்டல் என்றால் வேண்டுதல் என்றொரு பொருளுண்டு. திருமகள் திருமாலை மணக்க பரமேசுவரரைக் குறித்துத் தவமிருந்ததால் வேட்டீசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது.[19]

## ஆலய அமைப்பு

ஏழாம் நூற்றாண்டுக் கோயில் இதுவாகும். ஐந்து நிலை ராஜகோபுரமும், ஏழு கலசங்களுடன் இருக்கிறது. விமானத்தில் ராகு–கேது, சந்திர சூரியர்கள் புடைப்புச் சிற்பங்களாக வெள்ளி வேலைப்பாட்டுடன் இருக்கின்றனர்.

திருநாவுக்கரசரின் காப்புத் திருத்தாண்டகத்தில் இந்த ஆலயம் பற்றிய குறிப்பு இருக்கிறது. இது தேவாரவைப்புத் தலமாகும். காலச் சுழற்சியில் இக்கோயில் அழிய மீண்டும் 500 ஆண்டுகளுக்கு முன் செண்பகமரப் புதரிலிருந்து திருவேட்டீசுவரரை கண்டெடுத்தனர். பக்கத்திலிருந்த செண்பக ஓடையிலிருந்து அம்பாள் விக்கிரகம் கிடைத்தது. இதனால் தேவி செண்பகவல்லி எனப்பெயர் பெற்றார். செண்பக ஓடை இன்று செண்பகத் தடாகமாயிருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் 1.11.1734 இல் இந்தக் கோயில் நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆற்காடு நவாப் காலத்தில் ஏராளமான மானியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் அர்த்த ஜாம பூசைக்கு பால், பழம், மலர்கள் வழங்கும் கட்டளையை ஆற்காடு நவாப் வம்சத்தினர் கொடுக்கின்றனர்.[20]

தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் 'திருவேட்டீசுவரர் அதிசயப்பத்து' என்ற பாடலைப் பாடியிருக்கிறார்.

தல விருட்சம்: 27 நட்சத்திர விருட்சங்களும் உள்ளன.

தீர்த்தம்: செண்பகத்தடாகம்.[21]

# எழும்பூர் அர்த்தநாரீசுவரர்

## கோயில் அமைவிடம்

சென்னை எழும்பூரில் திருக்கோயில் ஆராவமுதன் தோட்டத்தெரு (தாசப்பிரகாஷ் ஹோட்டல் அருகில்) பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பகுதியில் அமைந்துள்ளது.

ஆராவமுதன் தோட்டத்தெரு சிவகாசி நாடார் மேல் நிலைப்பள்ளி அருகில் அமைந்துள்ளது.

இறைவன்: அர்த்த நாரீசுவரர்

இறைவி: திரிபுரசுந்தரி

திருநாவுக்கரசு பெருமானின் திருமுறைப்பாடலில் இப்பதியை வைத்துப் பாடியதால் இஃது வைப்புதலம் ஆகும்.[22]

மூலவர் ஜலகண்டேசுவரர் என வழங்கப் பெறுகிறார். திருநாவுக்கரசர் சேத்திரக் கோவை திருத்தாண்டகப் பாடலில் "எழுமூர்" எனப் பாடியது இன்றைய எழும்பூரையே குறிக்கும்.[23]

ஆங்கிலேயர் (டச்சு ராஜ்யம்) காலத்தில் முன்பு இருந்த கோயில் அழிக்கப்பட்டுத் தற்போது உள்ள கோயில் இது. ஆங்கிலேயர்கள் உச்சரிப்பு வசதிக்காக இது "எக்மோர்" ஆனது.[24]

## திருக்கோயிலின் அமைப்பு

இத்திருக்கோயில் மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரத்துடன் மூலவர் வாயிலும், மூலவர் அர்த்தநாரீசுவரர் கிழக்கு நோக்கிய வண்ணமும் அமைந்திருக்கின்றார்.

அம்பிகை திரிபுர சுந்தரி தனிச் சன்னதி கொண்டு தெற்குப் பார்த்த வண்ணம் உள்ளார். பிறைக் கோட்டங்களில் தட்சிணாமூர்த்தியும், துர்க்கையும் உள்ளனர்.

மூலவர் கட்டடத்திற்கு அருகில் மற்றொரு கட்டடத்தில் லட்சுமி நாராயணப்பெருமாள் இருக்கின்றார். இவருக்கு எதிரே கருடாழ்வாரும், அருகில் ஆஞ்சநேயரும் உள்ளனர்.

சைவ, வைணவ சமேதராக இக்கோயில் திகழ்ந்து இருப்பது மிகச் சிறப்பாகும்.

## திருக்கோயில் தலவரலாறு

இத்தலத்திற்கான புராண வரலாறு ஏதும் கிடைக்கவில்லை. காஞ்சிபுரம் க.வெ.அருணகிரி முதலியார் அவர்கள் தாம் அருளிய ‘‘அகில இந்திய ஆலய வழிபாட்டு’’ நூலில் இம்மூர்த்தியை சப்தரிஷிநாதர் என்றும் அம்பிகையை ஸ்ரீமதி என்றும் குறிப்பிட்டு உள்ளார். மேலும் இவரின் நூலில் உடையவர் ஜலகண்டேசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார். கனத்த மழை பெய்யும்போது இம்மூர்த்தியானவர் தண்ணீரினால் சூழப்பட்டு மூழ்கி விடுவார் என்றும், தண்ணீர் வடியும் போது மீண்டும் காட்சி கொடுப்பார் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[25]

இங்கு வாழ் மக்களும், மூர்த்தியானவர் மிகவும் பள்ளப் பகுதியில் இருந்ததாகவும், 1950 ஆம் ஆண்டு 25 அடி ஆழம் வரையில் தோண்டியும்

அடி காண முடியவில்லை என்றும் பின்பு இருந்தபடியே விட்டு விட்டனர் என்றும் கூறுகின்றனர்.

இறைவனின் இலிங்கத் திருமேனியானது வளர்ந்து வருவதாகவும் குருக்கள் கூறுகின்றார் (திரு. கருணாகர குருக்கள்).[26]

இத்தலத்தைக் குறித்து திருநாவுக்கரசு சுவாமிகள், சேத்திரக் கோவை திருத்தாண்டகத்தின் ஒரு பாடலில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

*கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங் குன்றூர்*
*கொங்கணம் குன்றியூர் குரக்குக் காவும்*
*நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்*
*நின்றியூர் நீடூர் நியமநல்லூர்*
*இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்*
*எறும்பியூர் ஏராரும் ஏம கூடம்*
*கடம்பை இளங்கோயில் தன்னி னுள்ளும்*
*கயிலாய நாதனையே காண லாமே* [27]

இக்கோயில் இப்பொழுது தனிநபர் பராமரிப்பில் இருக்கின்றது.

சென்னை வட்ட வைப்புத் தலங்கலோடு தொண்டை நாட்டு வைப்புத் தலங்களையும் காணும் வகையில் தொண்டை நாட்டு வைப்புத் தலங்களும் ஆயப் வெற்றுள்ளன.

## திருமுறை வைப்புத்தலங்கள்

முழுப்பதிகம் பாடாமல், வேறொரு தலப்பதிகத்தில் மற்றொரு தலம் பற்றிச் சொல்லப்படுமானால் அவை வைப்புத்தலங்கள் எனப்படும்.

அவ்வளவில் தொண்டை நாட்டில் பதிமூன்று தலங்கள் உள்ளன. இவை அனைத்தையும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் மட்டுமே குறிப்பிட்டுள்ளனர்.

## 1. கச்சி - மயானேசுவரர் ஆலயம்

பாடல் பெற்ற காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலின் உள்ளே தனிச் சன்னதியாக இவ்வாலயம் உள்ளது. பண்டன் எனும் அசுரனை அழித்த புராண வரலாற்றுத் தொடர்புடையது.

திருநாவுக்கரசு பெருமான் இத்தலத்து ஈசனை கச்சி மயானேசுவரனை தரிசித்து 6 ஆம் திருமுறையில் 97வது பதிகத்தில் 10 வது பாடலில் கச்சிமயானத்தைக் குறித்துப் பதிகம் பாடியுள்ளார்.

*மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி*
*மயானத்தான் வார்சடையான் என்னி னல்லன்*
*ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்*
*ஓரூரன் அல்லன் ஒருவனுமல்லி*
*அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்*
*அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்*
*இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்*
*இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே* [28]

இத்திருத்தலம் நன்கு பராமரிக்கப்படுகிறது.

## 2. பொய்கை நல்லூர் - அகத்தீசுவரர் ஆலயம்

திருநாவுக்கரசர் ஆறாந்திருமுறையில், கூறியுள்ள கயிலாய நாதனைக் காண வேண்டிய தலங்களுள் பொய்கை நல்லூரும் ஒன்றாகும். இத்தலத்தில் இறைவன் எழுந்தருளியுள்ள கருவறை மட்டும் கட்டடமாக அமைந்துள்ளது. சிறிய கட்டடமும் இடிந்த நிலையிலும், தூண்கள் இடிந்தும கட்டடம் சற்று சாய்ந்த நிலையிலும் உள்ளது.

*புலி வலம் புத்தூர் புன் கூர் புறம் பயம்*
*பூவணம் பொய்கை நல்லூர்*
*வலிவலம் மாற்பேறு வாய் மூர் வைகல் வலஞ்சுழி*
*வாஞ்சியம் மருகல் வன்னி*

*நிலமலி நெய்த்தானத்தோடு எத்தானத்தும் நிலவுபெருங்*
*கோயில் பல கண்டால் தொண்டீர்*
*கலி வலி மிக் கோனைக் கால்விரலால் செற்ற*
*கயிலாய நாதனையே காணலாமே!* [29]

என்கிறார் திருநாவுக்கரசர்.

### 3. விரிஞ்சிபுரம் - மார்க்கபந்தீசுவரர் ஆலயம்

மார்க்கபந்தீசுவரர் ஆலயம் ஐந்து பிரகாரங்களும் 110 அடி உயர ஏழு நிலைக் கோபுரமும் இத்திருக்கோயிலுக்குப் பெருமை சேர்ப்பன. 'திருவிரிஞ்சை மதிலழகு' எனக் குறிக்கப்படுகிறது.

பொய்யுரைத்த பிரம்மனுக்கு உபதேசம் பெற வேண்டி இத்தலத்தில் அவதரித்த தலம்.

திருவண்ணாமலைச் சிவனின் திருமுடியைக் கண்டதாகப் பொய்கூறிய பிரம்மன் பாவ விமோசனம் வேண்டிச் சிவசர்மனாய்ப் பிறப்பெடுத்தான். உயரம் குறைவாய் இருந்த சிவசர்மனுக்குத் தனது திருமுடியைச் சாய்த்துப் பூசைகளை ஏற்றுக்கொண்ட இத்தலத்தின் சிறப்பினைப் பற்றித் திருநாவுக்கரசர்

*கண்ணார் நுதலார் கரபுரமுறு காபாலியாரவர் காப்புக்களே*

எனப் பாடியுள்ளார். விரிஞ்சிபுரத்தின் மற்றொரு பெயர் கரபுரம் என்பதாகும்.[30]

### 4. பொன்னூர் - திருக்காமேசுவர் ஆலயம்

திருநாட்டுத் தொகை பதிகத்தில் 'பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே' [31] எனச் சுந்தரர் குறிப்பிட்டுள்ள பொன்னூர் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்திருக்கோயில் வளாகத்தினுள்ளேயே மச்சாவதாரக் கோலத்தில் வரதராஜப் பெருமாளுக்குத் தனிச்சன்னதி உள்ளது.

இத்திருக்கோயில் திருக்குளமும், தலமரமும் கோயில் வளாகத்திலேயே உள்ளது. இத்தலத்தைக் குறித்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருநாட்டுத்தொகை பதிகத்தின் 6வது பாடல் ஆகும்.

*தென்னூர் கைம்மைத் திருச்சுழியல் திருக்காணப்பேர்*
*பன்னூர் புக்குறை யும் பர மர்கிடம் பாய் நலம்*
*என்னூர் எங்கள் பிரான் உறை யுந்திருத் தேவனூர்*
*பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே"*[32]

## 5. தெள்ளாறு - திருமூலட்டானேசுவர் ஆலயம்

சோழர் கால வரலாற்றை எடுத்துக்கூறும் ஊர்களில் தெள்ளாறும் ஒன்று. இவ்வூர் வந்தவாசியிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது. திருநாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில் இத்தலப் பெயரைப் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரும் 'நள்ளாறு தெள்ளாறரத்துறைவாய் எங்கள் நம்பனே! என திருப்புக் கொளியூர் அவினாசி திருப்பதிகத்தில் பாடியுள்ளார்.[33]

திருநாவுக்கரசர் அருளிச் செய்த 6 ஆம் திருமுறையில் (அடைவுத் திருத்தாண்டகம்) பதிக எண் 71 இல் 10வது பாடலில் இத்தலத்தின் பெருமை குறிப்பிடப்பட்டுள்ளது. [34]

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த 7 ஆம் திருமுறையில், திருப்புக்கொளியூர் அவினாசி திருப்பதிகத்தில் 9ஆவது பாடலில் பாடியுள்ளார்.[35]

## 6. திண்டிவனம் - திருதீந்திரிணீசுவரர் ஆலயம்

இத்திருக்கோயில் கி.பி.985 முதல் 1010க்கு சோழப் பரம்பரையைச் சார்ந்த குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது.

இத்தலத்து ஈசனை, திண்டி, முண்டி, சிங்கிலி, கிலானி மற்றும் வால்மீகி போன்ற முனிவர்கள் வணங்கி முக்தி பெற்றதாகச் செவிவழிச் செய்தி உள்ளது.

திண்டி என்ற முனிவர் வழிப்பட்டதால் இத்தலம் திண்டிவனம் என வழங்கப்படுகிறது.

திருநாவுக்கரசுப் பெருமாள் தாம் அருளிய **6** ஆம் திருமுறையில் பதிக எண்.70ல், **9**வது பாடலில் இத்திருத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

*திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி*
*தேவூர் சிரபுரஞ் சிற் றேமம் சேறை*
*கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கடல்*
*குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு*
*அண்டர் தொழும் அதிகை வீரட்டானம்*
*ஐயா றசோகந்தி ஆமாத் தூருங்*
*கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்*
*கயிலாய நாதனையே காண லாமே* [36]

இத்தலத்தில், வன்னிமரத்தின் கீழ் கீழ் தனிச் சன்னதியில் சனிசுவரரும், வில்வமரத்தின் கீழ் தனிச் சன்னதியில் வில்வ கணபதியும் இருப்பது தனிச் சிறப்பாகும்.

## 7. திருப்புலிவனம் வியாக்ரபுரீசுவரர்

இறைவனை புலி வழிப்பட்டமையால் வியாக்ரபுரீசுவரர் என வழங்கப் படுகிறது. மிகவும் சிதிலமடைந்த திருக்கோயிலில் தட்சிணாமூர்த்தி திருஉருவம் அபூர்வமாக வடிக்கப்பட்டிருக்கின்றது. தனிச் சன்னதியாக கோஷ்டப் பிரகாரத்தில் பல நூற்றாண்டாக இருப்பதால் குரு பரிகாரத்தலமாக விளங்குகிறது. 'கலி வலி மிக்கோனை கால் விரலாற் செற்ற

கயிலாயநாதனைக் காண வேண்டிய இடங்களில் புலி வலமும் ஒன்றென திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.[37]

## 8. புரிசை - பிமேசுவரர் ஆலயம்

சுந்தரமூர்த்தி நாயனார் ஏழாந்திருமுறையில் உள்ள ஒரு பாடலில் 'பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே' என்ற வரிகளில் குறிப்பிட்டுள்ள 'புரிசை' இதுவே எனக் கருதப்படுகிறது.[38]

இத்திருத்தலம் காஞ்சிபுரத்திற்கு வடக்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## 9. வளர்புரம் - திருநாகேசுவரர் ஆலயம்

இவ்வைப்புத் திருத்தலம் வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம் குறுவட்டத்தில் இருக்கக்கூடிய பல கிராமங்களில் வளைகுளம் என்கின்ற வளர்புரம் கிராமத்தில் கிழக்கு எல்லையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

திருமுறைகளை அருளிய அருளார்களான திருநாவுக்கரசு சுவாமிகளும், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் அவர்களும் இத்திருக்கோயிலைக் குறித்துப் பாடியுள்ளனர்.[39]

## 10. திருக்காரிக்கரை - வாலீசுவரர் ஆலயம்

இத்திருத்தலம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. 'கடங்களுர் திருக்காரிக் கரை கயிலாயம்' என சுந்தரரால் குறிப்பிடப்பட்ட இத்தலத்திலுள்ள ஆலயத்தில் வாலீசுவரர் இருக்கின்ற தக்கோலம் கங்கா தீசுவரர் திருக்கோயிலின் நீர் சுரக்கும் நந்திபோல இத்திருக்கோயிப் நந்தி வாயிலிருக்கும் வற்றாத நீர் வந்து கொண்டிருக்கின்றது. (தக் கோலத்து நந்திவாயிலிருந்து தற்போது நீர் வருவதில்லை) ஆஞ்ச நேயர் வழிபட்ட

சிவத்தலங்அருள் இதுவும் ஒன்று. வாலிசுவரர் முன் நந்தியெம் பெருமானக்குப் பதில் ஆஞ்சநேயரே உள்ளார்.[40]

## தொகுப்புரை

நாயன்மார்கள் பாடிய பதிகங்களுக்குள்ளேயே அவர்கள் வழிபாடு செய்த தலங்களும், அருகேயுள்ள சிறப்பு வாய்ந்த தலங்களையும் குறித்தனர். அவை தேவாரத்திருமுறைகளுக்குள் அடக்கம் பெற்ற நிலையில் வைப்புத்தலங்கள் என்ற பெயரைப் பெற்றது.

தொண்டை நாட்டளவில் வைப்புத்தலங்களாக அமைந்தவை பதின்மூன்று. இவற்றுள் சென்னைப்பகுதிக்குட்பட்ட வைப்புத்தலங்கள் மூன்றாகும்.

தலபுராணங்களின் தலைவன் இறைவனாவான். புலவர்கள் பக்திப் பெருக்கால் தலபுராணங்களை இயற்றினர். அவை மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றின் பெருமையைப் பறைசாற்றும்.

வைப்புத் தலங்களை நந்திவரம், எழும்பூர், திருவல்லிக்கேணி தலங்கள் பல்வேறு சிறப்புகளையும் பெற்றனவாகத் திகழ்கின்றன.

# சான்றெண்விளக்கம்

1. கிருஷ்ணசாமி, வே., தமிழில் தலபுராண இலக்கியம், ப.39.
2. தேவாரம், ஆறாம் திருமுறை : பா.719
3. கிருஷ்ணசாமி, வே., தமிழில் தலபுராண இலக்கியம், ப.39.
4. மேலது, ப.111.
5. மேற்படி, ப.111.
6. மேற்படி, பக்.111, 112.
7. மேற்படி, ப.112.
8. ஆய்வாளர் நேரில் கண்ட நாள் 10.6.2015.
9. பக்திக்களஞ்சியம், ப.113.
10. ஆய்வாளர் நேரில் கண்ட நாள் 10.6.2015.
11. மேலது
12. சென்னைக் கோயில்கள், ப.33.
13. நாலாயிர திவ்ய பிரபந்தம் : பா. 1077
14. குறுந்தொகை : பா. 399
15. ஆய்வாளர் நேரில் கண்ட நாள் 13.6.2015.
16. சென்னைக்கோயில்கள், ப.16.
17. பாலசுந்தரகுருக்கள் ஆய்வாளரிடம் கூறியது நாள் 13.6.2015.
18. சென்னைக் கோயில்கள், ப.31.
19. மேற்படி, ப.32.
20. மேற்படி, ப.33.

21. மேற்படி, ப.34

22. வெங்கடேசன், வெ.த., சென்னை சிவப்பதிகள் 333, ப.64.

23. நடராசன், ந.ச., தொண்டை நாட்டு தேவாரத் தவங்கள், ப.185.

24. சாய்குமார், கே., நால்வர் நயத்த வைப்புத் தலங்கள், ப.111.

25. தொண்டை நாட்டுத் திருமுறைத் தலங்கள், ப.219.

26. மேற்படி, ப.220

27. தேவாரம், ஆறாம் திருமுறை : பா. 705

28. மேற்படி, பா. 960

29. மேற்படி, பா. 711

30. ந. ச. நடராசன், தொண்டை நாட்டுத் தேவாரத் திருத்தலங்கள் : ப. 183

31. மேற்படி, ப.184

32. தேவாரம், ஏழாம் திருமுறை : பா. 6

33. ந. ச. நடராசன், தொண்டை நாட்டுத் தேவாரத் திருத்தலங்கள் : ப. 184

34. தேவாரம், ஆறாம் திருமுறை : பா.710

35. தேவாரம், ஏழாம் திருமுறை : பா.729

36. தேவாரம், ஆறாம் திருமுறை : பா. 709

37. ந.ச. நடராசன், தொண்டை நாட்டுத் தேவாரத் திருப்பதிகள் : ப. 136

38. மேற்படி, ப.185

39. மேற்படி, ப. 186

40. மேற்படி, ப. 187